This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# புகார்...புகார்...புகார்...

(சாதாரண குழாய் ரிப்பேரில்தான் ஆரம்பித்தது வினை. அது கணேஷ் வசந்தை எங்கெல்லாம், எங்கெல்லாம் கொண்டு சென்றது.)

– சுஜாதா

ஃப்ளர்வர்ஸ் சாலை என்ற அந்த ஆங்கிலத் தமிழ் பெயர் கொண்ட சாலைக்கு மேம்பாலத்தைக் கடந்து தியேட்டரைத் தாண்டியதும் போலீஸ்காரருக்கு மரியாதைக் கொடுத்துவிட்டு “எப்படி இருக்கீங்க கோவிந்தசாமி?” திரும்பி கொஞ்ச தூரம் போனதும் வசந்த் திகைத்து லேசாகச் சீட்டியடித்தான்.

‘ஆகாஷ்தர்ஷன்’ ‘தேவகங்கா’ என்று பெயர் படைத்த இரண்டு ராட்சச வரிசை குடியிருப்புக்கள். வரிசைக்குச் சுமார் நூறு வீடுகள் இருக்கும், நூறும் பணக்காரர்கள் என்பது என்.எஃப்.டி.ஸி. படங்களில் பெண்களின் மார்பகங்கள் போல சந்தேகத்துக்கு இடமின்றி முகப்புகளில் சுலபமாகத் தெரிந்தது. பல மாடிக்கட்டிடங்கள் ஒரே மாதிரி பெட்டி பெட்டி பெட்டியாகக் கட்டப்பட்டிருந்தாலும், கொஞ்சம் பெரிய, பணக்கார பெட்டிகள் மேல்வர்க்க மக்கள் வாழும் குடியிருப்புகள். இரண்டு வரிசைகளுக்கும் இடையில் ஒரு நீச்சல் குளம். அதை வெளியாட்கள் பார்க்காமல் இருப்பதற்காக நெட்டிலிங்க மரங்கள் சைக்கிள்களும் மாருதி 1000 கார்களும் அனாதையாக கிடந்தும் நின்றும் கொண்டிருப்பதை வசந்த் கவனித்தான்.

“மை காட் திஸ் ப்ளேஸ் இஸ் லோடட் பாஸ்,” என்று கணேஷைப் பார்த்துச் சொன்னான்.

கணேஷ் “பாத்து ஓட்டு, மோட்சம் தியேட்டர் வரது,” என்றான்.

வசந்த், “பாஸ், திருட்டுப்புருஷன்னு மலையாள ஆர்ட் ஃபிலிம் வந்திருக்கு. நீங்க பார்த்தே ஆகணும். நான் ரெண்டு வாட்டி பார்த்துட்டேன். என்னா போட்டோகிஃராபி என்னா எடிட்டிங் !!”

கணேஷ் அவனை முறைத்து “மோட்சம் தியேட்டர்ல ஆர்ட் ஃபிலிம்மா ? யார்ட்ட காது குத்தறே?”

கார் அந்தக் காலனிக்குள் திரும்பக் கணேஷ், வசந்தை விஷயம் விசாரித்து வரச்சொல்லிவிட்டு கோர்ட்டுக்குப் போய்விடலாம் என்று யோசித்தான். இருந்தும் இந்தக் காலனியில் மறைமுகமாகத் தென்பட்ட சிறப்பும் செருக்கும் காலனிக்குள் ரகசியங்கள் பொதிந்திருக்கலாம் என்று எச்சரித்து வசீகரித்தது.

கணவன்மார் தம்பு செட்டி தெருவிலும் சைனா பஜாரிலும் பணம் பண்ணிக்கொண்டிருக்க வெயிலில் நகம் வெட்டிக்கொண்ட மனைவியர் மெலிதான சோரங்களிலும் ஸ்டார் டி.வி.யிலும் பொழுது போக்கிக் கொண்டிருக்கும் மேட்டுக்குடும்பங்கள். வசந்த் ஒரு பஸ் டிக்கெட்டில் குறித்து வைத்திருந்த அந்த விலாசத்தைத் தேடினான். ஒரு காவல்காரன் அவனருகில் வந்து “ஆப்கோ கோன் சாஹியே” என்றான்.